உகந்த நடவடிக்கையை இந்த அரசு மேற்கொள்ளுமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *உட்காருங்கள், கேள்விதான் கேட்கிறார் வேறொன்றுமில்லை. மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் திசையன்விளை பகுதியிலே பணிமனை அமைக்க வேண்டுமென்று கேட்டிருந்தார்கள். வழக்கு சம்பந்தமான கேள்வியைக் கேட்டிருக்கிறார். வழக்கு சம்பந்தப்பட்ட அந்த இடத்தை ஆய்வு செய்து மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட இடத்தில் பணிமனை அமைப்பதற்குரிய நடவடிக்கைகளை மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு எடுக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 39, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். பவுன்ராஜ், மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

39—

சமுதாயக் கூடம்

***4771—திரு. எஸ். பவுன்ராஜ்:**

மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பூம்புகார் தொகுதி, செம்பனார்கோவில் ஊராட்சி ஒன்றியம், திருக்கள்ளாச்சேரி ஊராட்சி, ஆற்றங்கரை தெரு ஆதி திராவிடர் குடியிருப்புப் பகுதியில் சமுதாயக் கூடம் கட்ட அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திருமதி வி.எம். ராஜலெட்சுமி, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதி திராவிட மக்களுக்கு முகம் தந்தவர் அம்பேத்கர். ஆனால், ஆதி திராவிட மக்களுக்கு முகவரி தந்தவர்*

யார் என்றால், அகிலமே சொல்கிறதே, அக்ரஹாரத்து அம்பேத்கர் எங்கள் அம்மா என்று. தாயின் திருவடிகளைப் பணிந்து, என்னுடைய பதிலை அளிக்கிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உறுப்பினர்கள் அமைதியாக இருங்கள்.

மாண்புமிகு திருமதி வி.எம். ராஜலெட்சுமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதி திராவிட மக்களின் எண்ணிக்கை, தேவையான இடம், போதுமான நிதி ஒதுக்கீடு ஆகியவற்றைக் கணக்கில் கொண்டு சமுதாயக் கூடம் கட்டடப்பட்டு வருகின்றது. அந்த வகையில், பூம்புகார் தொகுதி, செம்பனார்கோவில் ஊராட்சி ஒன்றியம், திருக்கள்ளாச்சேரி ஊராட்சி, ஆற்றங்கரை தெரு பகுதியில் ஆதி திராவிட மக்களுக்காக சமுதாயக் கூடம் கட்டுவது குறித்த மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கை மக்கள்தொகை, போதுமான இடம் மற்றும் இதர சாத்தியக்கூறுகளின் அடிப்படையில் ஆராய்ந்து, மாண்புமிகு முதல்வர் அவர்களின் அனுமதியோடு பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். பவுன்ராஜ் அவர்கள்.

திரு. எஸ். பவுன்ராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மண்ணைவிட்டு மறைந்தாலும், மக்கள் மனதில் நீக்கமற வாழ்ந்து கொண்டிருக்கிற என் தாய், புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். என்னுடைய பூம்புகார் தொகுதி, செம்பனார்கோவில் ஊராட்சி ஒன்றியம், திருக்கள்ளாச்சேரி ஊராட்சிக்குட்பட்ட ஆற்றங்கரை தெருவிலே 500–க்கும் மேற்பட்ட ஆதி திராவிட மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். எனவே, அந்தப் பகுதியிலே ஒரு சமுதாயக் கூடம் கட்டிக் கொடுத்தால், விசேஷ காலங்களிலே அந்தப் பகுதி மக்கள் நிகழ்ச்சிகளை நடத்துவதற்கு ஏதுவாக இருக்கும். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தனிக் கவனம் செலுத்தி, முன்னுரிமை அடிப்படையில் அந்தப் பகுதியில் ஒரு சமுதாயக் கூடம் கட்டிக் கொடுப்பதற்கு ஆவன செய்வாரா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகின்றேன்.

2017 ஜூன் 19]

முற்பகல் 11-15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திருமதி வி.எம். ராஜலெட்சுமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதி திராவிட மக்கள் தங்களின் சுப நிகழ்ச்சிகள், சமுதாய விழாக்கள், கூட்டங்கள் ஆகியவற்றை நடத்துவதற்காக, 1971 மற்றும் 1972 ஆம் ஆண்டுகளிலிருந்து சமுதாயக் கூடங்கள் படிப்படியாகக் கட்டப்பட்டு வருகின்றன. அவ்வகையில் நிதி ஒதுக்கீட்டைக் கணக்கில்கொண்டு, சமுதாயக் கூடங்கள் படிப்படியாக ஆண்டுதோறும் கட்டப்பட்டு வருகின்றன. எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு செல்லப்பட்டு, நிச்சயமாக முன்னுரிமை அடிப்படையில் பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். பவுன்ராஜ் அவர்கள்.*

திரு. எஸ். பவுன்ராஜ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முன்னுரிமை அடிப்படையில் செய்து கொடுக்கப்படும் என்று தெரிவித்த மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் மற்றும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும் நன்றி கூறி, விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 40, மாண்புமிகு உறுப்பினர் திரு. V.T. கலைச்செல்வன், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

40—

கால்நடைக் கிளை நிலையம்

***3211—திரு. V.T. கலைச்செல்வன்:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விருத்தாசலம் தொகுதி, விருத்தாசலம் ஒன்றியம், மு. பரூர் கிராமத்தில் புதிய கால்நடைக் கிளை நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?